නිවාස,ඉදිකිරීම් හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය
வீடமைப்பு,நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
Ministry of Housing, Construction and Cultural Affairs

# ලෝක නාට්‍ය දිනය
# உலக அரங்க தின
# World Theatre Day

27 මාර්තු மார்ச் March

ජාත්‍යන්තර රංගකලා ආයතනය
சர்வதேச நாடக நிறுவனம்
International Theatre Institute

ටවර් හෝල් රඟහල පදනම
டவர்ஹோல் நாடக மன்றம்
Tower Hall Theatre Foundation

உலக அரங்க நாள் செய்தி -2019

கார்லோஸ் செல்ட்றன், கியூபா.

நான் அரங்கம் பற்றி விழிப்படைய முன்பே என் ஆசான்கள் அதில் ஈடுபாடு கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த வாழ்க்கை எச்சங்களின் மீது தங்களுடைய இல்லங்களையும் கவித்துவ அணுகுமுறைகளையும் கட்டியமைத்துக்கொண்டார்கள். அவர்களில் பலர் அறியப்படாதவர்களாகவோ அல்லது அருமையாகவோ நினைவு கூரப்படுபவர்களாவோ உள்ளார்கள். அவர்கள் தங்களுடைய ஒத்திகை அறைகளிலும் அவர்களின் பார்வையாளர்கள் நிறைந்த அரங்கங்களிலும் அமைதியாகவும் அடக்கமாகவும் வேலை செய்தவர்கள் ஆவார்கள். மெதுவாகவும் பல வருட கால வேலைகளுக்கும் வழமைக்கு மாறான சாதனைகளுக்கும் பிறகு அவர்கள் இந்த இடங்களில் இருந்து படிப்படியாக வெளியேறிச் சென்று காணாமல் போனார்கள். அவர்களின் காலடிகளைப் பின் தொடர்தல் தான் எனது விதி என்பதை நான் புரிந்து கொண்ட போது நான் அத்துடன் இந்த விடயங்களையும் புரிந்து கொண்டேன். அதாவது நான் அந்தப் பிடியில் இருந்தும், மறுபடியும் நடக்காத ஒரு நொடியின் ஊடுருவை அடைவது தவிர வேறு எந்தொரு எதிர்பார்ப்பும் இல்லாமல் நிகழ்காலத்தில் வாழ்தல் என்ற நிகரற்ற பாரம்பரியத்தையும் புரிந்து கொண்டேன். அந்த நொடியானது அரங்கத்தின் இருளுக்குள் எதிர்ப்படும் ஒரு நொடியாகும். திரை விலக்கிச் சொல்லும் ஒரு சொல்லின், காட்டும் ஒரு அபிநயக குறிப்பின் உண்மையை விட வேறொரு பாதுகாப்பும் இல்லை.

எனது அரங்கத் தாயகமானது ஒவ்வொரு இரவிலும் எமது அரங்கத்திற்கு வந்த பார்வையாளர்கள் சந்திப்பு நொடிகளில் அமைந்தது. அவர்கள் எனது நகரத்தின் பல மூலை முடுக்குகளில் இருந்து வந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் எங்களுடன் சேர்ந்து சில நொடிகள், சில மணித்தியாலங்க்ள பங்கிட்டுக்கொண்டார்கள். எனது வாழ்க்கையானது இந்த நிகரற்ற நொடிகளால் கட்டியமைக்கப்பட்டதாகியது. நான் நானாகவே நிறுத்தப்பட்ட போதும் நான் நானாகவே அவதிப்பட்ட போதும் நான் மறுபிறவியெடுத்து அரங்கத் தொழிற்றுறையின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டேன். சுத்தமாகவே தற்காலிகமான உண்மையில் வாழும் திடீர் தருணங்கள், நாங்கள் எதை சொல்கின்றோம் எதைச் செய்கின்றோம் என்பதை அறிந்த இடமாகவும் அது அமைந்தது“ மேடை வெளிச்சத்தின் கீழ் கண்டெடுக்கப்படுவது எமது தனிப்பட்ட பிம்பங்களும் உண்மையும் ஆகும். எனது அரங்க நாடானது எனதும் என்னுடைய அரங்க நடிக நடிகைகளினதும் அவ்வாறான நொடிகளால் பின்னப்பட்ட ஒரு நாடாகும். அது நாங்கள் வேட முகங்களுக்குப் பின்னால் இருந்த நாடாகவும், அலங்காரப்பாணியுடனும் நாங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற அச்சத்துடனும் நாங்கள் இருளில் கை கோர்த்து இருந்தோம்.

அரங்கப் பாரம்பரியமானது தொடுவானம் ஆகும். உலகத்தின் ஏதாவதொரு நிலையத்தில் இருந்தோ, ஏதாவது ஒரு நகரத்தில் இருந்தோ அல்லது வசதியான கட்டத்தில் இருந்தோ அரங்கம் வெளியேறிச் சென்றுள்ளது என்பதை உறுதிப்படுத்தக்கூடிய எவரும் கிடையாது. என்னைப் பொறுத்தவரை அரங்கமானது அதனை ஆற்றுகை செய்கின்றவர்களின் வாழ்க்கைகளுடன் சேர்ந்த ஒன்றாகும். அது கண்ணுக்குப் புலனாகாத ஒரு புவியியல் பரப்பின் வழியாக பரவலாக்கப்படுகின்றது. அரங்க ரீதியான கைவினையானது ஒரு தனித்த ஒழுங்கிணைப்பு அபிநயமாகின்றது. சகல அரங்க ஆசான்களும் தமது அழகியல் மற்றும் தெளிவான விளக்கப்படுத்தல் என்பன சார்ந்த மீள் நிகழ்த்த முடியாத நொடிகளுடன் இறந்து போகிறார்கள். அவர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ளவோ அல்லது அவர்களின் புகழ் பெற்ற நிலைமையையோ அல்லது வேறு எந்தொரு சிறப்பான நிலைமையோ இல்லாமல் அவர்கள் ஒரே வழியில் படிப்படியாக மறந்து போகின்றனர். எமது பணியின் வேராக உள்ள நிலையான தன்மைக்கு முகங்கொடுக்கும் போது அங்கீகாரம் என்பது செல்லுப்படியானதாக இல்லை என்பதை அரங்க ஆசிரியர்கள் அறிவார்கள். உண்மையின், நிலைமையின், பலம், சுதந்திரம், ஆக்கபூர்வமான தன்மை என்பன பெரும் நிலையுறுதியற்ற தன்மையின் மத்தியில் ஐயப்பாடான நிலையில் உள்ளன. வீடியோக்களில் அல்லது புகைப்படங்களில் பதிவாகியுள்ள அவர்களுடைய ஆக்கங்களின் தரவுகள் அல்லது பதிவுகள் தவிர வேறு எதுவுமே தப்பிப் பிழைக்காது. எவ்வாறாயினும் மொழிபெயர்க்க முடியாதவையாகவோ அல்லது வெளிப்புறத்தில் கண்டெடுக்க முடியாதவையாகவோ உள்ள பதிவுகள் இரு இடத்தில் இடம்பெறுவதாக புரிந்து கொள்ளும் பொது மக்களின் மௌன எதிர்வினையால் இந்தப் பதிவுகள் எதிர்காலத்தில் காணாமல் போகும். அங்கு பகிர்ந்து கொண்ட வாழ்க்கை அனுபவமொன்று ஒரு சில நொடிகளில், வாழ்க்கையை விட மிகவும் பளிங்கும் தன்மைக்கொண்டதாக அமையும்.

அரங்கமானது ஒரு நாடாக இருந்தது என்பதை நான் புரிந்து கொண்டபோது அது முழு உலகத்தையும் சூழ்ந்திருப்பதாகச் செய்யும் ஒரு பெரும் நிலப்பகுதியாகவும் உள்ளது என்ற நிர்ணயம் சுதந்திரத்தின் புரிந்து கொள்ளலாகவே எனக்குள்ளே தோன்றியது. நீங்கள் அதிக தூரம் போக வேண்டும் என்று இல்லை, அல்லது நீங்கள் இருக்கின்ற இடத்தை விட்டு அகன்று செல்ல வேண்டியதில்லை, நீங்கள் உங்களை விட்டு ஓட வேண்டியதில்லை. நீங்கள் எங்கு வாழ்ந்தாலும் அங்கு பொது மக்கள் உள்ளனர். உங்களுக்குத் தேவையான கூட்டாளிகள் உங்கள் பக்கத்தில் உள்ளனர். உங்களுடைய வீட்டிற்கு வெளிப்புறத்தில் ஒளியை ஊடுருவிச் செல்லவிடாத படி, அன்றாட யதார்த்தத்தை உட்புக முடியாதபடி உள்ளது. நீங்கள் வெளிப்படையான அசைய முடியாத் தன்மையில் இருந்து எல்லோருடையதும் மாபெரும் பயணத்தை வடிவமைக்கப்படுவதற்கு, ஒடிஸி என்ற பெரும் வீரனின் சுற்றுலாவை மீளவும் மேற்கொள்வதற்கு, ஆர்கோனர்ஸின் (யுசபழயெரவள) பயணத்தை மேற்கொள்வதற்கு வேலை செய்கின்றீர்கள். நீங்கள் உங்களுடைய நிஜ உலகத்தின் கட்டுறுதியான தன்மையையும் அடர்த்தியான தன்மையும் விரைவுபடுத்துவதில் ஈடுபாடு நிறுத்தாமல் ஒரு நடமாடாத சஞ்சாரியாவார். உங்களுடைய பயணமானது திடீரென மேற்கொள்ளப்படுவதாகவும் உங்களுக்கு ஒத்த நபர்களின் முன்னால் மீள் நிகழ்த்த முடியாத எதிர்ப்படுதலாகவும் அமைந்துள்ளது. உங்களுடைய பயணம் அவர்களை நோக்கியதாக உள்ளதுடன் அவர்களின் இருதயங்களை, அவர்களின் அகநிலை சார்ந்ததாகவும் உள்ளது. அவர்களுக்குள் உங்களின் பயணம் நிகழும். அவர்களின் உணர்வுகள், அவர்களின் ஞாபகங்கள் என்பன உங்களை விழிப்படையச் செய்து உங்களை இயங்க வைக்கும். உங்களுடைய பயணமானது சுழலும் தன்மை கொண்டதாக உள்ளதுடன் எவராலும் அதனை அளவிடப்படுவதையோ அல்லது மௌனமாக்குவதையோ செய்வதில்லை. அது மாத்திரமல்ல அதனை எவராலும் சரியான இடத்திற்கு என்று அடையாளங்காட்டவும் முடியாது. அது உங்களுடைய மக்களின் கற்பனையாற்றலின் வழியாக மேற்கொள்ளப்படும் ஒரு பயணம் ஆகும். அது மிகவும் தொலைவு நிலங்களில் விதைக்கப்படும் ஒரு விதையாகும். அது உங்களுடைய பார்வையாளர்களின் குடியியல், ஒழுக்கவியல் மற்றும் மனித உணர்வுநிலை சா்ந்ததாகும். எனவே நான் எங்கும் செல்வதில்லை, நான் வீட்டிற்குள்ளே இருக்கின்றேன். எனக்கு நெருக்கமானவர்களுடன் வெளிப்படையான அமைதியுடன் இரவு பகல் வேலை செய்கின்றேன். ஏனெனில் வேகத்தின் இரகசியம் என்னிடம் உள்ளது.

கார்லோஸ் செல்ட்றன்: கியூபா நாட்டைச் சேர்ந்தவரான கார்லோஸ் செல்ட்றன் (ஊயசடழள ஊநடுனுசயுரே) பிரபல்யமான மேடை நாடக நெறியாளரும், நாடக ஆசிரியரும் அத்துடன் நாடக கல்வியாளரும் ஆவார்.

கார்லோஸ் செல்ட்றன் வெளியிட்டுள்ள 2019 ஆம் ஆண்டு உலக அரங்க நாள் செய்தியானது லுயிஸ் லெறெனா டயஸ் அவர்களால் ஸ்பெயின் மொழியில் இருந்து ஆங்கில மொழி பெயர்ப்பு செய்துள்ளார். ஆங்கிலம் வழி தமிழாக்கம் சாமிநாதன் விமல்.

Massage of the World Theatre Day 2019 and Carlos CELDRÁN's profile Translated into Tamil from English by Swaminathan Wimal on behalf of Tower Hall Theatre Foundation, National Centre of ITI, Sri Lanka